1990 மார்ச் 22]

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் 1952-லேயே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அன்றைக்கு ஒப்புதல் அளிக்கக்கூடிய தருவாயில் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விட்டார்கள். அதற்குப் பிறகு இதுவரையில் தொடர்ந்து அந்தத் திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமான திட்டம், வட ஆற்காடு மாவட்டத்திற்கு மிக தேவையான திட்டம் என்ற அளவுக்குத்தான் அது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு நேரங்களில் அங்கே விஜயம் செய்து பார்வையிட்டார்கள். அது தேவையான திட்டம் என்ற முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். இப்போது திடீரென்று இந்த நிலைக்கு அரசு வந்ததற்கு அடிப்படை காரணம் என்ன ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற காரணங்கள் எல்லாம் அன்றைக்கு இல்லையா ? புதிதாக இன்றைக்கு உருவெடுத்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

9–45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டு ஒரு திட்டம் மதிப்பீடு போட்டு விட்ட காரணத்தால் அதை 1952-ல் ஆய்வு செய்ததால் அதை அற்புதத் திட்டம் என்று ஒத்துக்கொள்ள முடியாது. ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதனால் மக்களுக்கு என்ன பலன் என்று பார்க்கவேண்டும். ஒன்று, புல்லூர் அணைக்கட்டுக் கட்டினால் அதனால் நீர்ப்பாசனத்திற்கு உதவுமா என்றால் அதுவும் இல்லை. பாசனத்திற்கு அதிலிருந்து நீர் எடுக்க முடியாது. சரி இரண்டாவது, அதனால் அங்கு பூமியில் ஊறும் நிலத்தடி நீரினால் (Ground Water) நமக்குப் பயன் ஏற்படுமா என்றால் அதுவும் ஆந்திரா மாநிலத்திற்குள்தான் நீர் பரப்பளவு (Water spread area) வருகிறது. எனவே நமக்கு அதிலேயும் பயன் இல்லை. ஆகவே இரண்டு பயனும் இல்லாததால் ஏதோ எழுப்பிவிட்ட ஒரு தோஷத்திற்காக அணையைக் கட்டவேண்டும் என்று கேட்பது முறையல்ல. அரசாங்கத்திற்கு நிதிநிலையும் அவ்வளவு சௌகரியம் இல்லை.

கண்ணாடிப்புத்தூர் அணைத் திட்டம்

*1876 திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கண்ணாடிப்புத்தூர் அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடியும் ?

(இ) அணையின் மூலம் பாசன வசதி பெறும் நிலம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமேயில்லை.

பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம்.

*2343 **டாக்டர் து. திருமூர்த்தி திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகுபொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கேளம்பாக்கம், கோவளம் இரு ஊர்களையும் இணைக்கும் பாதையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலம் பழுதுபட்டு ஆபத்தான நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது வாகனங்கள் செல்வதற்கு அரசு தடை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது குறித்து அரசுக்கு ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அது குறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகம், படிப்பு மற்றும் மருத்துவம் செய்ய வேண்டி கடற்கரைப் பகுதியிலிருந்து கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் போன்ற பெரிய ஊர்களுக்கு அன்றாடம் ஏராளமான மக்கள் வந்து போகும் அவசியம் இருப்பதாலும் Madras–Cuddalore Ferry service அமைக்க முற்படும் இந்த அரசு கோவளத்தையும் இடைப்பட்ட துறைமுகமாக அமைக்கும் சந்தர்ப்பம் இருப்பதாலும் இதற்கு உறு துணையாகவுள்ள இந்த மேம்பாலம் கட்டும் பணியை, அதற்கான முயற்சியை துரிதப்படுத்த முயலுமா என அறிய விரும்புகிறேன்.